


கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டு எண் 20 மாதையன் லேஅவுட் பகுதியில் ரூ18.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டும் பணியை கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. துவக்கி வைத்தார். இதில் அ.மெஹரிபா பர்வின் அசரப் அலி, அருள்வடிவு முனுசாமி, பா.அருண்குமார், எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், சுரேந்திரன், முனுசாமி உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியம், முல்லையூர் கிராமத்தில் நெய்வேலி நிலக்கரி ஆலையின் சார்பில் நிறுவன சமூக பொறுப்புணர்வு துறை (CSR) நிதியின் மூலம் அமைக்கப்பட்டுள்ள 1000 லிட்டர் திறன்கொண்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி மற்றும் பலர் உள்ளனர்.

## இந்தியா முழுவதும் உயர்நீதிமன்றங்களில் 330 பணியிடங்கள் காலி!

# சமூகநீதி, பாலியல் நீதி அடிப்படையில் நீதிபதிகள் நியமனம் அவசியம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, அக்.12-

இந்திய அளவில் உயர்நீதிமன்றங்களில் 330 நீதிபதி பதவிகள் காலியாக உள்ளன. இதனால் 67 லட்சம் வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. தாமதிக்கப்பட்ட நீதிபதி மறுக்கப்பட்ட நீதி என்று தெரிந்திருந்தும் இந்த நிலை நீடிக்கிறது. ஒன்றிய ஆளும் அரசு - முடிவெடுப்பதில் தாமதம் செய்வதே இதற்குக் காரணம்! சமூகநீதி அடிப்படையில் நீதிபதி நியமனங்கள் அவசியம்; இதற்கு சமூகநீதியாளர்கள் ஓரணியில் நின்று குரல் கொடுக்க வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை உள்பட 23 உயர்நீதி மன்றங்களில் 330 நீதிபதி பணியிடங்கள் காலியாக உள்ள அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது.

**உயர்நீதிமன்றம்**

டில்லி, சென்னை, மும்பை, கொல்கத்தா, அலகாபாத், கருநாடகா, கேரளா, குஜராத், கவுகாத்தி, மத்தியப் பிரதேசம், மேகாலயா, ராஜஸ்தான், திரிபுரா, பஞ்சாப் மற்றும் அரியானா உள்பட நாடு முழுவதும் 25 உயர்நீதிமன்றங்கள் உள்ளன. இந்த உயர்நீதிமன்றங்களில் அனுமதிக்கப்பட்டுள்ள நீதிபதி பணியிடங்களின் எண்ணிக்கை 1,122 ஆகும்.

இதில் 792 நீதிபதிகள் மட்டுமே இப்போது பணியாற்றுகிறார்கள். 161 நிரந்தர நீதிபதிகள், 169 கூடுதல் நீதிபதிகள் என 330 நீதிபதி பணியிடங்களின் எண்ணிக்கை உயர்நீதிமன்றங்களில் காலி யாக இருக்கும் அதிர்ச்சித் தகவல் வெளியாகி இருக்கிறது. அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் 160 நீதிபதி பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் 76 பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன.

**பணியிடங்கள் காலி**

மும்பை உயர்நீதிமன்றத்தில் 94 நீதிபதி பணி யிடங்கள் உள்ள நிலையில், 26 நீதிபதி பணியிடங் களும், பஞ்சாப் மற்றும் அரியானா உயர்நீதி மன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள 85 நீதிபதி பணியிடங்களில் 25 நீதிபதி பணியிடங்களும், கொல்கத்தா உயர்நீதி மன்றத்தில் உள்ள 72 நீதிபதி பணியிடங்களில் 24 நீதிபதி பணியிடங்களும், சென்னை உயர்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட 75 பணியிடங் களில் 19 பணியிடங்களும் காலியாக இருக்கின்றன.

எமது அருமை தூய்மைப் பணியாளர் சகோதர, சகோதரிகளுக்கு உரிமையுடன் அன்பு வேண்டுகோள்!

தாம்பரம் பெரியார் வாசகர் வட்டம் 3ஆவது கூட்டம் தலா 3 நீதிபதிகளை கொண்ட சிக்கிம் மற்றும் மேகாலயா உயர்நீதிமன்றங்களில் மட்டும் அனுமதிக் கப்பட்டுள்ள பணியிடங்களில் நீதிபதிகள் பணியாற்றி வருகின்றனர். மீதம் உள்ள உயர்நீதி மன்றங்களில் நீதிபதிகள் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளதால் வழக்குகள் தீர்வை எட்ட முடியாமல் இழுத்துக் கொண்டே செல்லும் நிலை இருக்கிறது.

**காரணம் என்ன?**

நீதிபதிகளை ‘கொலிஜியம்’ என்ற அமைப்பு தேர்வு செய்து வருகிறது. நீதிபதிகளை நியமனம் செய்வதற்கான ஒப்புதலை அரசிடம் இருந்து, ‘கொலிஜியம்’ அமைப்புப் பெறுவதில் ஏற்படும் நடைமுறை தாமதம்தான் சென்னை உள்பட 23 உயர்நீதிமன்றங்களில் நீதிபதிகள் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக இருப்பதற்கு காரணமாகக் கூறப்படுகிறது.

நாடு முழுவதும் உள்ள உயர்நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? 67 லட்சத்திற்கும் அதிகம்!

“தாமதிக்கப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதி” என்பதை ஆளும் ஒன்றிய அரசில் உள்ளவர்களும், ‘கொலிஜியம்’ என்ற நீதிபதிகள் பணியிடங் களுக்குப் பரிந்துரைக்கும் மூத்த நீதிபதிகளும் அறியாதவர்களா?

“நீதிபதிகளை நியமனம் செய்வதற்கான ஒப்புதலை ஒன்றிய சட்ட அமைச்சகம் மற்றும் உரிய அமைப்பு முறை அதிகார மய்யங்களிடமிருந்துப் பெறுவதில் ஏற்படும் நடைமுறைத் தாமதம்தான் சென்னை உயர்நீதி மன்றம் உள்பட 23 உயர்நீதிமன்றங்களில் நீதிபதி பதவிகள் நிரப்பப்படாமல் காலியாக இருப்பதற்கு மூல காரணம்!

நீதித்துறைதான், ஜனநாயக ஆட்சியில் மக்களின் ஒரே கடைசி நம்பிக்கை!

இதன் நிலை இப்படி இருப்பதற்கு உரிய மூலகாரணம் என்ன என்பதைத் தோண்டித் துருவி, அந்த முடிச்சினை வெட்டி விடுவதற்கு - வழியில் என்ன தடை?

சமூகநீதி எல்லா அரசுத் துறைகளில் குறிப்பாக, நிர்வாகத் துறை (Executive), சட்டமன்ற - நாடாளுமன்றத் துறை (Legislature), நீதித் துறை (Judiciary) மூன்றிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதே- ஆட்சியாளர்கள், நீதிபதிகள் (குடியரசுத் தலைவர் தொடங்கி) அனைவரும் எடுத்துக் கொள்ளும் அரசியலமைப்புச் சட்டப்படியான பதவிப் பிரமாண உறுதி மொழி! - தத்துவம்.

ஆனால் இது இத்துறைகளில் முழுமையாக அல்லது பெரும்பான்மையாகக் கடைப்பிடிக்கப்படுகிறதா என்ற கேள்விக்கு பதிலாக, ஏமாற்றமே மிஞ்சுகிறது!

நீதிபதிகள் நியமனங்களில், ஆட்சியாளர் கொலிஜியத்தின் பரிந்துரையை ஏற்பதில் தாமதம் ஏன்?

தங்களது கொள்கைச் சார்புள்ளவர்கள் - தக்க வகையில் அடையாளம் காணப்பட்டு, தங்களுக்கு வேண்டியவர்களா என்பதை அறிந்து ஒன்றிய ஆளுமையாளர்கள் இறுதி இசைவு தருவதில் தாமதம் ஒருபுறம்.

மற்றொருபுறம், உயர்நீதி மன்றங்களின் மூத்த மூன்று நீதிபதிகள்தான் கொலிஜியத்தின் பரிந்துரைக் குழுவினர்.

இவர்களில் தலைமை நீதிபதி ஒருவர்; மற்றவர்கள் பணிமூப்பு அடிப்படையில் இரண்டு மூத்த நீதிபதிகள்.

இவர்களில் சமூகநீதி உணர்வாளர்கள் இடம் பெற்று விட்டால் - சீர்கேடுகளுக்கு அவர் ஒத்துப் போக மாட்டார்கள் என்று உணர்ந்து, சமூகநீதிக்கு எதிராக உள்ள ஆதிக்கவாதிகள் ஒரு தந்திர நடைமுறையை உயர் அமைப்புகளின் ஒத்துழைப்போடு கையாளுகிறார்கள் என்பது கண்கூடு.

இதில் உயர்நீதிமன்ற அல்லது உச்சநீதிமன்ற கொலிஜியத்தில் இடம்பெறத்தக்க சமூகநீதியாளர் இருந்தால் அவர் பதவி ஓய்வு பெறும் வரையில் தலைமை நீதிபதி பதவி அவருக்கு வராது. ஒன்று கிடப்பில் போடுவது, இல்லையேல், அவர்களை மிக லாவகமாக மற்ற உயர்நீதி மன்றங்களுக்கு நீதிபதி பதவிக்கு மாறுதல் மூலம் அனுப்பி விடுவது!

இங்கே வரிசைப்படி சீனியர் - அங்கோ ஜூனியர் போல வரிசையில் பின்னுக்குத் தள்ளப்படும் விசித்திரம்!

இன்னும் சில உயர்ஜாதி நீதிபதிகளின் யுக்தி - தந்திரத்தால் - இங்கே சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ள நீதிபதி ஒருவர் மேலே உச்ச நீதிமன்றம் செல்ல வெகு நாள் ஆகும்! அதற்குள் ஓய்வு வயதும் வந்துவிடும்; அதற்காக பக்கத்து மாநில உயர்நீதிமன்றத்திலும் மாறுதல் பெற்று, உச்சநீதிமன்றத்தில் இடம் பெற்று - ஓய்வு பெற்றும் புதிய பதவிகளைப் பெற்று விடுவர்.

இவையெல்லாம் உயர் ஜாதியினரின் உத்திகளும், தந்திரமும் பிணைந்து மேலே அதிகாரத்தில் உள்ளவர்களின் ஒத்துழைப்புடன் நடைபெறுவதற்கு முன் உதாரணம்!

இவை போல கண்டறிவதற்கு முடியாத ‘முகபடாம்’கள் பலப்பல!

பெண்களுக்கு வாய்ப்பு - பாலியல் நீதி என்ற கோரிக்கையை நிறைவேற்றும் பாவனையில் உயர் ஜாதிப் பெண்களையே வழக்குரைஞர்களிலிருந்து தேர்ந்தெடுத்து, சமூகநீதிக்கு இடந்தராத ‘பாலியல் நீதி’யை நடைமுறைப்படுத்திக் காட்டும் விசித்திர சமூக அநீதி!

இவையெல்லாம் பற்றி மக்கள் மன்றத்தில் எந்த உள்நோக்குகளும் இன்றிப் பொது நோக்கோடும் - மக்கள் நல சமூகநீதி - உண்மையான பாலியல் நீதி உணர்வுடன் விளக்கிட பல முற்போக்குச் சுயநலம் துறந்த, துணிச்சல் நிறைந்த பொதுநலவாதிகள் தேவை!

உச்சநீதிமன்றமும், கொலிஜியமும் - அண்மைக் காலங்களில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் பரிந்துரை செய்யவேண்டும் என்று வெளிப்படையாகக் கூறிடும் நிலை தோன்றியுள்ளது. நமது இயக்கமும், சில முற்போக்கு சிந்தனை வழக்குரைஞர்களும் மேற்கொண்ட பணியால் சிறிது சிறிது மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனை ஒரு மக்கள் இயக்கமாகவே நடத்தி, சமூகநீதி, பாலியல் நீதிப்படியே இனி நிரப்பப்பட வேண்டிய நீதிபதிகள் நியமனம் அமைவதற்கு அனைத்து சமூகநீதியாளர்களும் ஓரணியில் திரண்டு, ஒரே குரலில் மக்கள் பெரு விருப்ப நியாயங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்க, விழிப்புணர்வைத் தட்டியெழுப்புவதே ஒரே வழியாகும். உண்மை நீதி அங்கே கிடைக்க வேறுவழி ஏது?

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் போச்சம்பள்ளி மற்றும் திருவணப்பட்டி ஊராட்சி ஆகிய இடங்களில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” முகாம்களில் மருத்துவ முகாம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை அரங்கு, இ–சேவை மையம், ஆதார் மையம், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டை பெறுவதற்கான அரங்கு உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பாக அரங்குகள் அமைக்கப்பட்டன. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. முகாமில் கோரிக்கை மனு அளித்தவர்களுக்கு உரிய சான்றிதழ்களை உடனடியாக வழங்கினார் உடன் கதிரவன், சாந்தமூர்த்தி, ரஜினி செல்வம், எக்கூர் செல்வம், குமரேசன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வக்ஃபு சட்டத்திருத்தம் :

# முதல்வர் மு.க.ஸ்டாலின்தான் முதலில் எதிர்த்தார்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேச்சு!



திருவள்ளூர், அக். 12 -

தமிழ்நாடு அரசு நிதியில் இருந்து கட்டப்பட்ட தமிழ்நாடு வக்ஃப் வாரிய பூவிருந்தவல்லி சரக அலுவலக கட்டடம் திறப்பு விழா மற்றும் வக்ஃப் நிறுவனங்களுக்கு பெருமராமத்து மற்றும் பழுது பார்ப்பு திட்டத்தின் கீழ் மானியம் முதல் தவணை வழங்குதல் தமிழ்நாடு அரசின் நிதி ரூ.16 இலட்சம் செலவில் கட்டப்பட்ட தமிழ்நாடு வக்ஃப் வாரிய பூவிருந்தவல்லி கட்டடம் திறப்பு விழா நடைபெற்றது

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் தலைமை தாங்கி புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டிடத்தை பயன்பாட்டிற்காக திறந்து

தமிழ்நாடு நிறுவனங்களுக்கு பெருமராமத்து மற்றும் பழுதுபார்ப்பு திட்டத்தின் கீழ் 2025-2026ம் ஆண்டு வழங்கிய ரூ.15 கோடி மானியத் தொகையில் முதற்கட்ட மாக 38 வக்ஃப் நிறுவனங்க ளுக்கு ரூ.9,77,61,401/- ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதல் தவணை தொகை 50% ரூ.4,88,80,701/-க்கான காசோலைகளை சம்பந்தப்பட்ட வக்ஃப் நிறுவனங்களின் முத்தவல்லிகளிடம் வழங்கி சிறப்புரையாற்றினர்

அப்போது பேசிய அமைச்சர்

பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவில் பல்வேறு மதங்களை பின்பற்றுகிறவர்கள் ஒன்றாக வாழ்கிறார்கள். ஆனால் ஒன்றிய பா.ஜ.க அரசு சிறுபான்மையினருக்கு பல துன்பங்களை இழைத்து வருகிறது. அதையெல்லாம் தமிழ்நாடு எதிர்த்து வந்தது. அந்த வகையில் வக்ஃபு வாரிய சட்டத்திருத்தம் கொண்டு வந்த போதும், அதனை எதிர்த்து முதலில் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய ஒரே முதலமைச்சர் நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான். என அமைச்சர் தெரிவித்தார்

இவ்விழாவில் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகை உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தமிழ்நாடு வக்ஃப் வாரிய முதன்மை செயல் அலுவலர் அஃதாப் ரசூல், திமுக நகர கழக செயலாளர் ஜி. ஆர்.திருமலை, நகர் மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், மாநில சிறுபான்மை அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் ஷாஜகான், முத்துவல்லி முஹம்மது ஹனீப் கௌஸ், பள்ளிவாசல் நிர்வாகிகள் ராஜா உசேன், ஷேக் பரீத், மாஹீன் அபு பக்கர், மஹபூப் பாஷா, ஈக்காடு முகமது ராஃபி, பூவிருந்தவல்லி நகர நிர்வாகிகள் எச்.தாஜுதீன், துரை பாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லிராணி மலர் மன்னர், எஸ். அசோக்குமார், ஜெ.சுதாகர், இரா. புண்ணியங்கோட்டி, அன்பழகன், சௌந்தரராஜன், ஏ.ராஷீக், விமல் ஆனந்த், வார்டு செயலாளர் ஆனந்த் பாபு, வக்ஃப் நிறுவனங்களின் முத்தவல்லிகள் மற்றும் தமிழ்நாடு வக்ஃப் வாரிய அலுவலர்கள் தி.மு.க. நிர்வாகிகள் கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர்.




சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் மேற்கு ஒன்றியம் பைத்தூர் ஊராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இவ்விழாவில் தே.மலையரசன் எம்.பி., கு.சின்னதுரை, ரா.வரதராஜன், டாக்டர் வே.செழியன், ஏ.ஏ.ஆறுமுகம், பைத்தூர் ரவி, பூக்கடை ராஜா, சசிகுமார் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ.சு. மணி

**அக்டோபர் 12 (1962)**



**சென்னை 57வது வட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.**

**சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றியவர்**

**மும்முனைப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார்.**

**விலைவாசி போராட்டத்தில் பங்கேற்று சிறையில் இருந்தபோது சிறைக் கைதிகளால் தாக்கப்பட்டு மரணமடைந்தார்.**

**தலைவர் கலைஞர் அவர்களால் ‘கொள்கைக் குன்று’ எனப் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**